மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கூடுமானவரை அதிகப் படுத்திக் கொண்டு வருகிறோம்.

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரன் முறைப்படுத்தும் திட்டம்.

* வினா எண். 69—திரு. மா. சுப்பிரமணியம் : திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளிகளில் நியமனம் பெற்றிருக்கும் தற்காலிக முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக பணி வரன்முறை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் முழுத் தகுதி பெற்ற அனைத்து தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களின் பணி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்றுவிரைவில் வரன்முறைப்படுத்தப்படும், தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலை பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் பணி களை மேற்குறித்த பணிவிதிகளுக்கொப்ப அந்தந்த நிர்வாகமே பணிவரன் முறைப்படுத்தும்.

திரு. மா. சுப்பிரமணியம் : இதர மாநிலங்களில் நடை முறையில் உள்ளது போல் தமிழ்நாட்டிலும் பிளஸ் 2 பிரிவில் பணியாற்றி வருகிற ஆசிரியர்களின் பெயரை மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெயர் மாற்றத்திற்கான தேவை ஏதும் இப்போது எழவில்லை.

திரு. செ. செம்மலை : மற்றத் துறைகளில் தற்காலிகமாகப் பணிகளில் அமர்த்தப்பட்டவுடன் பணிவரன்முறை செய்யப்படா விட்டாலும் ஆண்டுதோறும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இந்த ஆசிரியர்களுக்கும் பணி வரன்முறை செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் சர்விஸ் ரூல்ஸ் வெளியிட்டவுடன் குறைந்தபட்சம் ஆண்டு ஊதியம் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பணி விதிகள் வெளியீடு வதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். அது வெளிவந்த பிறகு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: தற்போது தற்காலிமாக முதுகலைப் பட்டதாரிகள் சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டு வருகிறது. ரெகுலரைஸ் ஆகும் வரை பணிப் பாது காப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார் களா?

1981 ஆகஸ்டு 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணிப்பாதுகாப்புத் தருகிற வகையிலே உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறோம். சாதாரணமாக ஆசிரியர் பயிற்சி பெறாதவர்கள் தொடர்ந்து முழுத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சித் தகுதியைப் பெற மூன்று ஆண்டு காலம் தந்து அவர்களை அது வரை வெளியேற்றக் கூடாது என்ற பாதுகாப்புத் தந்திருக்கி றோம். அதையும் மீறி யாரேனும் நடந்து கொண்டிருந்தால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

திரு ஏ. இராமலிங்கம் : இப்படிப்பட்ட மேல்நிலைப்பள்ளி களில் பகுதிநேர முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாக நிய மிக்கப்பட்டவர்கள் 20 பீரியட்கள் பாடம் எடுத்தால்தான் 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றும், 20 பீரியடுகளுக்குத் குறைவாகக் கொடுத்திருந்தால் 300 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. குறைந்தபட்சம் இந்த வித்தியாசம் இல் லாமல் எல்லோருக்கும் ஒரே அளவில் 300 ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பகுதிநேர ஆசிரியர் களைப் பொறுத்து தனியாக சில விதிமுறைகளை வைத்திருக் கிறோம். தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்

திரு கு. ரமணி. மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அவர்கள் தகுதியைப் பெற மூன்று ஆண்டு காலம் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்தத் தகுதியைப் பெற பரீட்சை எழுதி அந்த முடிவுகள் வருவதற்குள்ளாக அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கும்படியான செய்திகள் அரசுக்கு அனுப் பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால் ஸ்தல ஸ்தாபனங்கள் தாங்கள் நியமித்துள்ள முதுகலை பட்டதாரி கள் பரீட்சை எழுதி முடிவுகள் வரும் வரை பார்த்து பின்னர் நடவடிக்கை எடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய திடீரென்று வேலையிலிருந்து நீக்கும்படியான காரியங்கள் நடக்காமல் இருப்பதற்கான் பாதுகாப்பை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஸ்தலஸ்தாபனங்களைப் பொறுத்தமட்டில் ஏதாவது நாங்கள் போட்டிருக்கின்ற உத்தரவுகளுக்கு மாறாக நிலை இருக்குமா னால் குறிப்பிட்ட அமைச்சருக்குக் கேள்வியைப் போட்டுப் பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 70, 71 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன